

# காதலுக்கு காணிக்கை

Pax Ravichandra

pax.ravichandra@gmail.co

02-2-2024

## காதலுக்கு காணிக்கை

# காதல் காதல் காதல்

---

வண்ணமலர்களாய், வாசப்பூக்களாய்
கண்ணுக்கு விருந்தாகி-நெஞ்சுக்கு மணமாகி
காதல் வாசம் வீசும் கன்னியரில்தான்
எத்தனை வாசங்கள்-எத்தனை வண்ணங்கள்.

பெண்மையில் எத்தனை கலை நயங்கள்
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என
ஆண்மை மயங்கிடும் அதிசயங்கள்
தாய்மையில் தெய்வீகத்தின் திருநிலைகள்

வண்ணமலராய் மலர்ந்து-வாசமாய்
நேசம் வீசியவளும்-காலவெள்ளத்தில்
வாடிப்போக -காதல் கூட-காலத்தின்
சார்புநிலை கோட்பாடா?

அன்பு இதயங்களின் அதிசய வெளிப்பாடு-காதல்
சாதி, மத, இன, மொழி நிலை தாண்டி
உணர்வுகளின் கூப்பாடு-காதல்

வயதெல்லை கடந்த வசந்தத்தில்-கவிஞனாய்
கலைஞனாய் கண்டவனைக்-கன்னியும் காதல் கொள்ள-
முதியவன் நெஞ்சிலே புது வசந்தின் மலர்ச்சி-பூத்தாள்
முகம் கண்டு பார்த்தவன் நெஞ்சிலே-பரவசத்தின் ஆட்சி

கண்டு நெஞ்சு சிலிர்க்க, கவிதை ஆயிரம் மனம் இசைக்க
ஏவாளைக் கண்ட ஆதாமாய் என் மனது
முதல் மனிதனைக் கண்ட ஏவாளாய் அவள் மனசு

வண்ண மலர் கண்டேன், வாசம் நுகர்ந்தேன்
எண்ணம் கண்டே, காதலில் என்னை இழந்தேன்
கள்ளிருக்கும் மலரால் காதலலைச் சொன்னேன்
தமிழ் சொல்லெடுத்து கவிதை வடித்தேன்

அணைக்கும்போதெல்லாம் ,அணையாது வளர்ந்த காதல்
அணை தாண்டி பொங்கிய காவிரி, இதழ் சுவைக்கும்போதெல்லாம்
இன்சுவைதாண்டி இனித்த மாங்கனி, காணும்போதெல்லாம்
விழி சுவைக்க புன்னகை பூக்கும் நாணப்பூவிழி

செவிகள் ''கள்'' உண்டு சுவைக்க
மொழியிலோ கானக்குயிலின் இசையொலி
காதலில்தான் எத்தனை வண்ணங்களடி
காவியமாய் நம் காதலடி

கண்டு விழிகள் கள்ளுண்ட தேன் வண்டாய்க் களிக்க
மெய் கலந்து மெய்யின்பம் பேரின்பம் என உயிர் சுவைக்க
வயது கடந்து அன்பு, வரம்பு கடந்த காதலாய்ப் பூக்க
வாழ்வில் மலர்ந்த புதுவசந்தம்.

பூவிழிகளில் காதல் தேன் சிந்த, பொன்னுடல் பூவாசம் சிந்த
புன்னகையில் நாணம் ஒளிய, செவ்விதழ்களில் செந்தேன் பொழிய
காதல் முத்தெடுத்தேன்-சொல்லெடுத்தே காதல் கவிதை படைத்தேன்
சொர்கம் இதுதான் எனப்புரிந்தேன்.

இளமை பூத்தாடும் அழகியின் வாழ்வோ
புது விடியல்-முதுமை கூத்தாடும்
கலைஞனில் வாழ்விலோ மாலைத் தென்றல்

பருவத்தில் மலர்ந்த காதலும் பட்டுப்போவதுமுண்டு,
பல்லாண்டு காதலும் கடந்துபோகும் காலத்தே
இளமை, முதுமை இணைந்து பிறக்கும் காதலும்
கனவாய் கலையும், பழங்கதையாய் மறையும்

நண்பனின் அறிவுரையில்-அஞ்சி
நானும் மறைத்தேன் என் காதலை
கன்னியின் கண்ணின்று என்னை மறைத்தான்.
காதல் தோல்வியைத் தவிர்த்தேன்

காலங்கள் செல்ல-கவிஞனின் வாழ்வும் வரண்ட பாலையாயக் காய
மையிட்ட விழிகளும், மது சொட்டும் இதழ்களும்-கள்ளுண்ட
காதல் போதையை சொல்ல காதல் கொடிதென்று மனமும் சொல்ல
கண்ணீரில் காயும் இதயம், கனலாய்த் தீக்கும் மஞ்சம்

இருண்ட வாழ்வில்-கதிராய் காதலைத் தேடும் கவிஞன் உள்ளம்
காலங்கள் போயின பருவங்கள் மாறின, என்னை மறந்து
அவளை நினைத்து காதலின் அஞ்ஞாதவாசங்கள்
மறக்கத்துடிக்க நினைக்கத்தோன்றும் தவமாய் பூவிழி வாசம்

ஒரு நாள் கதவைத் தட்டும் சத்தம் சங்கீதமாக-
கனவில் மூழ்கிக் கிடந்த நெஞ்சில்
கானக்குயிலின் சந்தமாக, மெல்லத் திறந்த கதவு
உள்ளே நுழைந்தது தேன் நிலவு

உடல் தேடும் மனிதர் நடுவே
உள்ளம் தேடும் மனிதனாய் என்னைக் கண்டவள்
என்னைத் தேடி வந்த நேரமது.

பருவங்கள் மாறிட-உருவத்தில் அழகு கூட்டிட
விழிகளிலே ஒரு கவர்ச்சி
நடையினிலே ஒருவித தளர்ச்சி

காதல் நோய் தந்தவள் நெஞ்சில், காலனும் காதலாகி
மார்பு புற்றுநோயாய் குடி வர, வாழும் காலங்கள்
சில மாதங்களாக, வசந்தம் கலையும் கனவாக
தேடி வந்த கானக்குயில்

இமயச்சோகத்தை இதயம் சுமக்க
இமைக்காத விழிகள் என்னவளை
அணைத்து ஆறுதல் மொழிய
இரு மனம் கலந்து திருமணமான பொழுது

என் மடியில் அவள் உறங்க, தாய் மடி ஈந்து நான் கலங்க
காதல் உறவு பூத்துக் குலுங்க, இதயம் சோகத்தால் உருக
மெல்லப் போகும் அவள் உயிர் மூச்சோடு
உலாப் போகும் என் சுவாசக் காற்று

வாடியது என் வண்ணப்பூச்செண்டு
வருந்தி மடிந்தது அவள் தேன்வண்டு

காதலுக்கு வயதில்லை- மரணமில்லை
மெய் செத்தும் பொய்க்காத காதல்
காதலர் இறந்தாலும் காதலுக்கு மரணமில்லை
அமரத்துவமானது காதல்

*எல்லாப் புகழும் இறைவனுக்கே*
*இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க*
*Pax Ravichandra-1-08-2023*

# காதல் மழை மேகம்





என் விழிகளிலோ கார்கால மழை
என் மொழிகளிலோ முகாரியின் இசை
ஒற்றைக்குயிலாய் கரையும் இதயத்தில்
ஓயாத சோகச் சுனாமியின் அலை

எண்ணிக் களித்த மனம் ஏங்கித் தவிக்க
கண்ணாடிபோல் இதயம் நொருங்கிச் சிதற
பொங்கிப் பாயும் சோக வெள்ளத்தில்
நீச்சல் தெரியாத இதயம் மூழ்கித் தவிக்கும்

நிலவில்லாத வானாய் இதயம் கறுக்க
கயிறறுந்த காற்றாடியாய் மனம் தவிக்க
எங்கே அவள் என கதறும் இதயம்

மும்தாஜை பிரிந்த ஷாஜகானாய் இதயம் துடிக்க
சீதையை பிரிந்த ஸ்ரீராமனாய் மனமும் தவிக்க
காதலே ஏனடி இந்த வேதனை?

கண்ணீர் சிந்தி விழிகள் சிவக்க
கரையும் மொழிகளில் அழுகை பிறக்க
என் காதல் நந்தவனமே-சோகவனமானது
சகுந்தலையே துஷ்யந்தனை மறந்த நிலையானது.



மீனின் அழுகை நதி அறியாதது
அலையின் தவிப்பு வானுக்கு புரியாதது
ஏழ்கடலிலும் ஆழம் என் சோகம்
விசும்பிலும் பரந்தது என் துயரம்

பாடிக்களித்த கோகிலம் கரைந்தழ. சூடிக்கொடுத்த
மாலை வாடிக் கறுக்க எண்ணிக் களித்த மனதில் ஈட்டிகள்
பண்ணோடு தொகுத்த கவிதையில்
புண்பட்ட நெஞ்சத்தின் அவல நிலைகள்

ஏற்றி வைத்த காதல் தீபத்தை சோகப் புயலணைக்க
வண்ணக்காதலுக்கும் கண்பட்டதோ? புண்பட்டு மனம் தவிக்க
என் பெண்சிட்டு போனதெங்கே? சொல்வாய் தென்றலே!

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
PaPax Ravichandra-1-08-2023

# காதல் பூஜை

செவ்வாய் முத்தங்களால் நெஞ்சம் இனிக்க
இதழ் முத்தம் அமுதோ இல்லை மதுவோ என மலைக்க
காதல் போதையில் மனம் கூத்தாடிக் களிக்க
சுவாசத்தை நிறைத்த பூவையின் வாசம்
இதயத்தை நிறைத்த காதலின் சுவாசம்

என் சுவாசத்தில் வாசமாய் கலந்தவளே
என்னை மறந்தாள்- என் நெஞ்சுக்குள் கோகிலமாய்
கூவிக்களித்தவளே என்னைப் பிரிந்தாள்

பூமழை பொழிந்து-நெஞ்சில் காதலை  வளர்த்தவளே-
இன்று தீ மழையில் நான் கருகிட-ஏனடி
என்னை மறந்தாய் கண் மறைந்தாய்?

கண்ணுக்கு விருந்தாகி-காதல் வானுக்கு நிலவாகி
அமுதாய் இனித்த காதல், நெஞ்சுக்கு விஷமாகி
நினைவிற்கு அமாவாசை இருளாகி
கானல் நீரானதே, வாழ்வு கனவானதே

அமுதான காதலும், ஆலகாலமாய்க் கசந்திட-
என் சொர்க்கமும் சுடுகாடாய் போன மாயம்
நினைக்கத் தெரிந்த மனதிற்கு மறக்கத் தெரியாத பாவம்
துடிக்கத் தெரிந்த இதயத்திற்கு ஓயத் தெரியாத சுபாவம்

வாடாத காதல் மலரும் வாடிப் போயிட
வற்றாத காதல் கங்கையும் வற்றிக் காய்ந்திட-
நூலறுந்த உன்தன் காதல் காற்றாடி
கண்மணி புழுதியில் அல்லாடுதடி

தந்தி அறுந்த வீணையில் முகாரியின் ஓலம்
தனியாய்க் கரையும் குயிலின் கானத்தில் சோகம்-
எல்லாம் மாயையான உலகில்-பார்வதி
தேவதாஸாய் என் கோலம்

காணும்போதெல்லாம் கண்கள் வியக்க-இதயம் துடிக்க
தேகம் சிலிர்க்க, சுவாசம் மணக்கப், புன்னகைப் பூக்கள் தூவிக்
கண்களால் அணைத்தாய், நாணச்செம்மையை நான் இரசிக்க.
இதயம் சுவைக்க புது வசந்தமாய் மலர்ந்தாய்

காதல் சஞ்சீவினியாய் மலர்ந்தவளே-நீயின்றி
என் காதல் பொய்கையும் வற்றிப், பூவனமும் கருகிட
புயலழித்த பூவனமாய் என் இதயமடி
நிலவில்லா வானாய் என் உலகமடி

மலரில்லாப் பூவனமாய் காதல் தேனி வாட
காற்றின்றி காதல் காற்றாடி மண்ணில் விழ
சூடத் துடித்த மணமாலை வாடிப்போனதென்ன-என்
சோடிக்குயில் சொல்லாமல் மறைந்த மாயம் என்ன?

கண்களால் என்னைத் தழுவி
காதலை நெஞ்சுக்குள் விதைத்தாய்
கவிதையால் நான் துதிக்க
காதல் தேவதையாய் மகிழ்ந்தாய்

மலர் கொடுத்தேன் முட்களை தந்தாய்
புன்னகை தந்தேன்-கண்ணீர் தந்தாய்
என்னைத் தந்தேன்-ஏனடி என்னைக்
சிலுவையில் அறைந்தாய்?

எங்கிருந்தாலும் கண்மணி நீ வாழ்க
நீயே என் காதலடி
உன் வாழ்வே என் சுவாசமடி

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
PaPax Ravichandra-1-08-2023

# காதல் காதல், காதல் இன்றேல் சாதல்

---

கண்பார்த்து நெஞ்செழுதிய-காதலும்- கலைந்திடும்
கனவாகும், கற்பனையாகும், பழங்கதையாகும்
கல்லடிபட்டு நோகாத நெஞ்சம் கன்னி சொல்லடிபட்டு
கண்ணாடியாய் நொருங்கும்.



அஞ்சுக மொழியிலும், கொஞ்சிய செவ்வாயிலும்
கோபக்கனல் தெறிக்க- ஊடலால் சொல்லடிபட்டு
உறவுகள் சோகக் கடலில் மூழ்கிட, வார்த்தைகள் தீயாய்
இதயத்தை எரித்திட , விழி நின்று கங்கை பாயும்

விழி பார்த்து மயங்கிய நெஞ்சம்,கொஞ்சும்
மொழி கேட்க கெஞ்சும், எழில் பார்த்து காதல்
இயம்பிய பந்தம், இணைபிரிந்து ஒற்றைக் குயிலாய்
தனிமையில் உருகிக் கரையும்

நெஞ்சமும் நீயாகி-நினைவெல்லாம் உனதாகி
அன்பினால் கொஞ்சி மகிழ்ந்த, காதல் அஞ்சுகமும்
என்னை மறந்ததோ? இணை பிரியாத
என் அன்றிலும் என்னைப் பிரிந்ததோ?

நெஞ்சம் காங்கையாய் எரிய, கண்களில் கங்கை வழிந்தோட
முகம் பார்த்து பூத்த மனம்-, நிலம் பார்த்து பார்வையைத் தவிர்க்கும்
பூச்சூடி, செவ்வாயில் புன்னைகை சூடி களித்த மங்கையின் கார்குழல்,
பூவின்றி வாட, செவ்வாயும் புன்னகையின்றி சோர சோகம் சொல்லும்.

காலங்கள் போக, காயங்கள் மெல்ல ஆற
சோக வெள்ளம் வற்றிப்போக
சொர்க்கத்தின் கதவுகள் மெல்லத் திறந்திட
எட்டிப் பார்க்கும் எழில் விழிகள்

கட்டியணைத்துக் காதல் சொல்லும் இதயங்கள் களிப்புண்டு
களைப்பாறி மகிழும், நெஞ்சமும் நீயாகி என் நினைவெல்லாம்
உனதாகி-கொஞ்சி மகிழ அஞ்சுகம் காதல் மழலை பிழற்றும்
இதயம் கட்டழகை தேவதை என கவிபாடும்.

காமம் கடந்த காதல்- மனம்
என்னவளைக் காண ஏங்கும்- மோகம்
கழித்த மனதும் இன்னொருத்தியை
ஏறெடுக்க மறுக்கும்

ஊடலும் கூடினால் நஞ்சாகும், நெஞ்சம் புண்ணாகும்-
காமத்துப்பால் புகட்டிய பாடமாகும்.
இதயங்கள் துடித்திட, முகாரியின் ஆலாபனை
உதயங்கள் விழித்தெழ புள்ளினத்தின் பூபாள இசை



எங்கிருந்தாலும் அவள் திசை சுட்டும் இதயமும்
காதல் திசையறிக்கருவி, எங்கிருந்தபோதும் என்னை
அழைக்கும் கானக் குயிலோ, காதலின் வற்றாத அருவி
காதல் இதயத்தின் மொழி-கானக்குயில்களின் ஒலி

ஊடல் இன்றிக் காதல் இல்லை ஊடலே வாழ்வானால்
காதலும் இல்லை, காதலில் ஊடல் காவிய நிலை
ஊடல் கொண்ட காதலில், கூடல் அன்பின் பெருநிலை

காமக் கடல் கடக்க-இறைவன் தந்த
காதல் நாவாயாய் மங்கை
இறை துதி பாடும் இதயத்திலோ
பொங்கிப் பாயும் ஆனந்தக் கங்கை

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*PaPax Ravichandra-2-08-2023*

# காதலுக்கு அஞ்சலி

---

கயல்விழி சொல்லும் காதல் மொழி கண்டு களித்த மனம்
காதல் கவிதையெழுத, மையலுற்ற கவி விழிகள்-மைவிழியாள்
காதல் வலையில் சிக்கித் தவிக்க, செவ்விதழ் பூத்த புன்னகையை
இதயம் மாலையாய் சூடத் துடிக்க, மன்மத அம்பு தைத்த மனம்



பூ மேனி வாசம்-தூபாஞ்சலி, சுட்டும் சுடர் விழியிரண்டும்
தீபாஞ்சலி, அழகோ, பிரம்மனுக்கோ மலரஞ்சலி
என்னைக் காதலில் வீழ்த்திய அழகியோ கீதாஞ்சலி

வெண்ணிலவோ கருவானில்-கருநிலா உலாவும்
வெண் வானோ கயல்விழிகளில்-மனம் வியக்க, கவி படைக்க
வெடித்த கனியாய் விரிந்த இதழ்கள்ளைச் சுவைக்க, மனம் தவிக்க
ஒளிந்தும் ஒளியாது ஒளிரும் பற்களோ வெண் முத்தைப் பழிக்க
பாவை என்னை ஆளும் பூவை, ஶ்ரீராமன் நான் தேடிய சீதை

கருவிதழ் விரித்த இமைப்பூக்கள் மனதைக் கொள்ளை கொள்ள
பிறைநுதல் பூத்த பொட்டு கவிதை சொல்ல, மூக்கழகோ
கிள்ளையை வெல்ல, கன்னச்சிவப்பில் நாணத்தின் நறுமணம்
கார்குழலோ வெள்ளி பூத்த கருவானம்
கண்ட இதயத்திலோ-மாறாத காதலின் நறுமணம்

வேடன் வலைபட்ட மானாய்-காமன் கணைபட்டு
மனம் துடிக்க, அழகுப் பூவை - கண்ணால் பூத்தாள்
நெஞ்சை அள்ளும் காதல் புன்னகை

நாணிச் சிவந்த கன்னியோ முக்கனியும், சக்கரையும் சேர்ந்த கலவை
ஐம்புலன்களுக்கும்- ஆறாம் அறிவிற்கும் இவளோ முத்தமிழின் அவை
காணும் கண்களிலும் காமத்துப்பாலின் சுவை
கவியெழுத கம்பனும் சொல்லாத உவமை

கீதாஞ்சலி கண்டு மனம் கவிதாஞ்சலி படைக்க
மலரஞ்சலியாய் மாலை மாற்றி மங்கையை நான் மணக்க
மனதிலோ மணக்கும் காதலின் தூபாஞ்சலி

இதயத்தில் காதலின் வாசம்
சூடிகொடுத்த ஆண்டாள் மனதிலே
மாறாத நேசம்

முத்தச் சுவை நித்தம் சுவை, காதல் பக்திச் சுவை,
எத்திக்கும் தித்திக்கும் கன்னி திகட்டாத காதல் சுவை
காதல் அவை இவளோ, அழகின் ஔவை
காமன் கணை இவளோ-கம்பனின் கவிதைச்சுவை
முல்லைக் கொடியோ பாரி நெஞ்சில் படாந்த வள்ளல் நிலை

கண்கள் பார்த்துச் சுவைக்க, மனம் நினைத்து இரசிக்க
இதழ்கள் சுவைத்து களிக்க-பெண்பாலோ இன்பத்துப்பாலின்
இன்சுவை- கனவிலும் இனித்தாள், நினைவிலும் இனித்தாள்
மனதிலும் இனித்தாள்-மஞ்சத்திலும் இனித்தாள்
அமுதிலும் இனியாள்-அழகிலும் இனியாள்.

சொல்ல முடியாத அழகைச் சொல்லிப்பார்த்தேன் தமிழில்
அள்ள முடியாத கடலை அள்ளிப் பார்த்தேன் கரங்களில்
அணைக்க, அணைக்க வளரும் காதல் அதிசயத் தீ
காதல் வேள்வியில் நானோ, கவிஞனும், காதலனுமான ஆகுதி

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-04-08-2023

# காதற் காமம்

---

"காதற் காமம் காமத்துற் சிறந்தது -விருப்போர்
ஒத்து மெய்யுறு புணர்ச்சி"-பரிபாடல்



அன்பினால் இன்புற்று அறியாத மெய் இன்பம்
உயிர் அறிய, உணர்வு விழித்து
அறிவழித்து மனமழித்து-காதலில் நிலைத்து
உறும் காதற் காமம்-காதலில் சிறந்தது

மதுமலர்க் கூந்தல் வாசம் மோந்து, மல்லிகையோ,
முல்லையோ என மனம் வியந்து, பொன்மேனி வாசம்
சந்தனமோ? சவ்வாதோ? என மனம் கிறங்கி-பொன்
சங்குக் கழுத்தில் முத்தத்தால் கோர்த்த முத்துமாலை

சந்தக்கவிதையாய் அவள் இதயம் துடிக்க-காஞ்சி இருக்கக்
கலிங்கம் குலைய கொடியிடை தழுவ, மலர் வனம் அள்ளி
மார்பினில் மாலையாய் சூடி, குவி முலை தழுவிக் கோதி
முத்துநகை பூத்த இதழ்களில் முத்த நகை பூட்டிய காதலன்

பொன்மேனி வாசம் முல்லையோ?, மல்லிகையோ மனம் வியக்க
முடி தொட்டு அடிவரை மோந்து முத்தகோலமிட்டு மகிழ்ந்து
நாபியில் நல் முத்தம் தந்து செவ்வாய் வருடி-செங்காந்தள் விரல் தழுவி
செவ்வாழைத் தொடைகள் தழுவி நம்மை நாம் மறந்தோம்

விழி நோக்கி வேலோ காயலோ என வியந்து
மெது முத்தம் தந்து இமை மூடி, இன்பத்துப்பாலை
காதலால் வசமாக்கி, மைவிழி சிவந்து இதழ் வெளுக்க
மலர் மேனி செஞ்சந்தனம் பூசி மணக்க தழுவினேன்

செங்கலச மார்பு சிலிர்த்து நறுமேனி நாணிச் சிவக்க
சிவமும், சக்தியும் ஒன்றாகி, நாதபிரம்மம் நாமாகி-
காதற் காமம் சுவைத்து காமசூத்திரம் படிக்க
காமத்துப்பாலாய் தன்னைப் பருகத் தந்து இன்புற்ற தேவி

காமத்தின் முடிச்சுகளை மெய்யவிழ்க்க
கலிங்கத்தின் முடிச்சுக்களை கையவிழ்க
காதலில் விழுந்தே எம்மை மறந்தோம்
காமத்தைக் கடந்தால் கடவுள் நிலை புரிந்தோம்

மொட்டவிழந்து இதழ்விரிக்க பொன்வண்டு தேன் சுவைக்க
கட்டவிழ்ந்த காதல் காமம் நினைக்கையிலும் இனிக்குதடி
நெஞ்சமெல்லாம் தேன் கங்கை பாய மெய் சிலிர்க்குதடி

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***

*Pax Ravichandra-04-08-2023*

# காதல் காணிக்கை

---

வண்டும் மயங்க அவளோ வண்ணமலர், கண்டு மயங்க
என் கண்களுக்கு கன்னியோ தேவமலர், தேன் சிந்தும்
செவ்வாயை நான் சுவைக்க நெஞ்சில் தீராத காதல் விடாய்
கண்கள் உரசிப் பிறந்த காதல் வேள்வியில் நாமோ ஆகுதி

பொன்மேனியில் அழகின் பூக்கோலங்கள் பூத்தாட
கார் மேகக் கூந்தல் இடைதொட்டுக் கூத்தாட
வான் நிலவோ?, வண்ண மயிலோ-நெஞ்சில்
காதல் பண்பாடும் கவிக்குயிலாய் இவள்




கண்பட நாணி காதலாகிச் சிவக்கும் கன்னி
காதல் கிளி நான் சுவைத்திடும் காதல் கனி
நீல நயனங்களில் நீங்காத கனிவு
முத்துப்புன்னகையில் என்னைக் கவரும் பரிவு

பார்த்து ரசித்து, பக்கம் நெருங்கி, பழகிக்களித்து
காதலாகி மலர்ந்த உறவு-கனியாகு முன்
உலகை உலுப்பிய இரண்டாம் உலகப்போர்
அமெரிக்காவைத் தாக்கிய ஜப்பானின் உக்கிரப் போர்

போராட நாடு கடந்து போர் முடிந்து
அமைதி திரும்பிட வீடு வந்தவன்
நெஞ்சிலே ஆயிரம் கனவுகள்-என்றும்
இனிக்கும் அவள் காதல் நினைவுகள்

இறைவனுக்குத் தன்னை அடிமையாக்கி-
இளவயது மங்கை துறவு பூண்டாள்
வாழ்ந்த மண்ணை விட்டு-ஈழ மண்ணில்
தொழுநோயாளிகளுக்கு பணியாள் ஆனாள்

வாழ்வைத் துறந்த கதை நெஞ்சைப் பிளந்திட
குண்டு பட்டும் குணமான நெஞ்சில் ஆயிரமாயிரம்
குண்டுகள் பாய்ந்திட, எரி தணலில் வீழ்ந்த
இறகொடிந்த பறவை, எல்லாம் மாயையான நிலைமை

கடல் கடந்து மாந்தீவு வந்து, கன்னியைச் சந்தித்த போது,
தொழுநோயாளிகளின் காயங்களைக் கழுவிக் கட்டுப்போடும்
கன்னியோ காதலைத் துறந்த அருட் சகோதரி
வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணமாக்கிய கன்னியாஸ்திரி

கண்டும் கண்களில் எந்த மாற்றமுமில்லை
பார்வையிலோ காதலின் துளிச் சாயலுமில்லை
சுக்கு நூறாய் நொருங்கிய இதயத்திலோ
இமயத்தைச் சுமக்கும் துயரம்



காதலைச் சொல்லியும்-கன்னி முகத்தில் புன்னகை
அழுது கெஞ்சியும், என் அவலம் மாறாத நிலை
நெஞ்சிலோ தொழுநோய் பற்றிய துயரநிலை

இயேசுவே என் குரு- சேவையே என் நெறி, பேரிடியாய் வந்த பதில்
இதயத்தை நொருக்கிட, குண்டு மழையில் தப்பி,
காதல் மழையில் படுகாயமுற்றேன், கண்களில் கங்கை பிறக்க-
நெஞ்சிலே சோக எரிமலை வெடிக்கத் துவண்டுபோனேன்.

காதலைத் தந்த கடவுளுக்கு
கன்னியைத் தர மனமில்லை-அன்று
காதல் மழை பொழிந்த வானில்
இன்று இறை சேவை பெரிதான நிலை

கனிந்த முகத்தோடு காயங்களுக்கு மருந்திட்டவளுக்கு
என் நெஞ்சின் காதல் காயம் தெரியவில்லை
கன்னி மனமே காதலுக்கு மருந்தெனத் தெரிந்தும்
தேவகன்னிக்கு என் துயரம் புரியவில்லை

பூத்தவள் சின்னப் புன்னகை என்னைப் பற்றிட-ஒரு முத்தம்
தந்தேனும் என்னை வழியனுப்பு, நாளெல்லாம் உன் நினைவில் வாழ்வேன்
காயமான மனதிற்கு உன் முத்தம் காமெல்லாம் சஞ்சீவினியாகட்டும்
என் காதல் காயம் ஆறட்டும், கண்ணீர்க் கங்கை காயட்டும்

எங்கிருந்தாலும் உன்னை எண்ணி வாழ்வேன்-சொல்லி முடிக்குமுன்
தொழுநோயாளியின் காயத்தை முத்தமிட்டவள், இயேசுதான் என் நேசர்-
இதுதான் என் வாழ்க்கை, என்னை மறந்து புதிய வாழ்வு வாழுங்கள்
வாழ்வு இறை தந்த கொடை-பிறருக்காய், வாழ்வது இயேசுவின் அருள் மழை



உயிரைத் துச்சமாக மதித்து நாட்டுக்காக போராடிய உங்களுக்கு
தியாகம் பெரிதல்ல- காதலைத் துறப்பதும் தியாகமல்ல
விழி சிவந்து, மொழி மறந்து, கண்ணீர் மல்க காதலைப் பிரிந்தேன்-
ரணமான நெஞ்சில் மாறாத, மறையாத உறவாய்க் கன்னி-
காதல் சிலுவையில் அறைபட்ட இயேசுவாய் நான்

நீலவிழிகளால் காதல் மொழி பேசியவள்-செவ்விதழ்களால்
புன்னகை பூக்கள் தூவி, "சிரிப்பூ" சூடிய பூமகள் -இன்று
தீயந்தும், தீயாமல் நாளும் நான் வெந்திட
காதல் நெஞ்சில் "நெருப்பூ" மூட்டினாள்

காதலை விதைத்த நெஞ்சில்
கவலையை விதைத்தாள்-இமைக்க
மறந்து பார்த்து இரசித்த விழிகளுக்கு
கண்ணீரைப் பரிசளித்தாள்

மாடியில் நின்று பார்த்தவள் நெஞ்சில் மாறாத வேதனை
இறைவா என் காதலன் உயிரோடு மீண்டு வந்தாள்
***என் காதலே உனக்குக் காணிக்கை***




வாக்குறுதி மாறாத கன்னி-வடியும்
கண்ணீரை மறைத்து-வந்தவன் மறையும் வரை
பார்த்து நின்ற அருட் சகோதரி

கூப்பிய கரங்கள் நன்றி சொல்ல, புன்னகை பூத்த இதழ்கள்-
தொழுநோயாளர் சேவையில் தன்னை மறந்திட
காதலைக் காணிக்கையாக்கிய மங்கை
தேவமங்கையாய்த் தவமியற்றும் நங்கை

பூக்களை கொடுத்த நெஞ்சுக்கு-முட்கள் பரிசானதே?
காதல் பாக்கள் பாடிய நெஞ்சுக்கு-முகாரி இசையானதே?
பரிதவிக்கும் பூ நெஞ்சின் கரங்களில் உருளும் ஜெபமாலை
கயல் விழிகளில் உதிரும் கண்ணீர்மாலை

இயேசுவின் தோள்களிலோ பாரச் சிலுவை
காதலர் இதயங்களிலோ சோகச் சிலுவை

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-4-08-2023*

# கற்பும் பொற்பும்

---

சீறிச் சிலம்புடைத்து வழக்குரைத்த கண்ணகியின்
சீற்றத்தில்-மன்னனும் மனம் வெந்து மடிந்திட
மாதரசியும் மனம் நொந்து மாண்டிட
வழுவிய செங்கோலும், வழுவாத கற்பும்

மதுரையை எரிக்கத் தெரிந்தவளுக்கு
மடிந்த, கணவன் உயிரை மீட்கத் தெரியவில்லை
சத்தியவான் உயிரை மீட்ட- சாவித்திரியின்
சரிதை கற்புக்கரசிக்குத் தெரியவில்லை.

நெய் வளர்த்த தீயில் நீராடி வந்தவள்
சேலையைத் தீயும் தீண்டவில்லை
சீதையின் கற்பும் மாமன்னன் பொற்பும்
அக்கினியால் நிரூபனமான நிலை.

மா மன்னிடம், சிறைப்பட்டும் சீதை மயங்கவில்லை
மணி முடி தாழ்த்தியும் -மாதரசியின் காதல் கிட்டாத நிலை
மாற்றான் மனைவிமேல் காதல் கொண்டது இழி நிலை
முடியிழந்து மண்ணில் வீழ்ந்தது அவல நிலை

அழகுடையாள் அருகிருந்தும்-ஆடல் அரசியிடம்
கோவலன் கொண்டதும் மோகம்
பணம் பரிமாறி உடல் பரிமாறி , வணிகனும்,
வரைவின் மகளும் புரிந்ததும் வணிகமோ?

மோகத்தில் பாதை மாறிய கணவன்
மனதை மாற்ற முடியாத கற்பு, பொற்பு
கள்வனாய்க் கொலையுண்டபின் கணவனை
மீட்டெடுக்க முடியாத உண்மையோ கசப்பு

கற்புக்கரசி சீதையின் காதலும் நிலைக்கவில்லை
கணவன் ராஜா ராமனை வேண்டாமென்று பிரிந்தது
காவியகாலத்து விவாகரத்தின் முதல் நிலை?

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-4-08-2023

# காற்று வாங்கப் போனேன்

காற்றோடு பேசிட, மென்மையாய்த் தழுவிக் காதோரம் நேசம் சொன்னது
ஆற்றோடு பேசிட- அலைகள் கால்களை வருடி அன்பைச் சொல்லின
மலர்களோடு பேசிட, நேசத்தை வாசமாய்ச் சொரிந்த வண்ண மலர்கள்
நிலவோடு பேசிட-ஆரத்தழுவி நேசம் சொல்லிய சீதளக் கதிர்கள்

ஆற்றோரம் காற்று வாங்கி நடைபயில, காற்று வாங்கி
கன்னி மயிலும் உலாவிட, கண்ட மனதில் காதல் உலாவர
கண் பார்த்து மொழி பேச, கவிதை பூத்து மொழியவிழ
இதழ்விரித்த மலராய்ப் பூத்த இளையவள் மனம்

இதயம் துள்ளித் தவிக்க, இமைக்க மறந்த விழிகள்
பார்கத்தவித்து பரவசத்தில் நிலைக்க,
பேசத் துடித்த மொழிகளை விழிகள் பேசிக் களிக்க
கண் பார்த்து நெஞ்செழுதிய காவியமாய் மலர்ந்த காதல்

மனமும் நின்றது மங்கை அழகைக் கண்டு
மணந்து சொன்னது, வாச மல்லிகை இவள் என்று
கண்களும் இசைத்தன ரீங்காரம் தேன் மலர் இவளென்று
மலர்ந்த காதலில் மனங்கள் பூத்தன காதலர் நாம் என்று

கன்னச்சிவப்பினில் நாணம் கனிந்திட
எண்ணப் பறவை சிறகடித்துப் பறந்திட
வானுக்கும் ஓர் நிலவு-வண்ணப் பூவாய்
மலர்ந்த இவளோ என் காதல் தேன்நிலவு

காதல் அஞ்சகம் என்னை நாளும் கொஞ்சி மகிழ
வண்ணப் பூவனமாய் மலர்ந்த காதலோ
இன்றும் வாடா மலராய் நெஞ்சில் நிலைக்க,
காற்று வாங்கப் போனேன்- ஒரு காதல் வாங்கி வந்தேன்

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-5-08-2023

# கவிஞன்

---

கண்பார்த்து நெஞ்செழுதும், என் படைப்புக்கள் கவிதைகள் அல்ல,
உண்மையின் தரிசனங்கள், அநீதி கண்டு கொதிக்கும் நெஞ்சத்தை,
அமைதியால் அணைபோட்டு- தூங்கிடும் மானுடத்தை
துயில் எழுப்பிட முழங்கிடும் மணியோசைகள்

சத்தியத்தின் சாட்சியமாய் என் படைப்புக்கள்
சுடர் வீசும் ஒளியாய், சுகம் தரும் தென்றலாய்த் தழுவி,
மாலை, கல் வீச்சு, புகழ், வசை கடந்து
மத்திமப் பாதையில் புத்தனாய் பயணங்கள்

மை சிந்தும் எழுதுகோல் அல்ல, மெய் சிந்தி
இருள் போக்கி, சத்திய தரிசனம் காண
கல்மனங்களை புரட்டிப்போடும் நெம்புகோல்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்
உண்மையை மறைத்து- பொய்மைக்கு வண்ணம் பூசிடும்
இனவாத, மதவாதிகளிடமிருந்து விடுதலைபெற
சத்தியத்தின் சாட்சியமாய் அதன் குரல்

கைதட்டலுக்கும், மாலைக்கும் கவிபாடாமல்
காண்போரை மயக்க ஆடல் மகளாய் மாறாமல்
காசு, பணத்திற்கு தெருக்கூத்தாய் தாழாமல்
சத்தியத்திற்கு சாட்சியமாய் எம் மொழி

மானுட சிந்தனையைத் தூண்டி-சகோதரத்துவம் வளர
சத்தியத் தேடலை வேள்வியாக்கி, ஆணவத்தை ஆகுதியாக்கி
அமைதி வாழ அமுதெடுத்து, ஆலகால அராஜகத்தை ஒதுக்கி
அன்பே சிவம், சச்சித் ஆனந்தம் நாம், நம் அறை கூவல்

காதலும், கண்ணீரும் வாழ்வியல்
அன்பு, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம்-அமைதியும்
நீதியுமான சமூகத்தை கட்டியெழுப்பும் தத்துவங்கள்
கிருஷ்ணா, புத்தா, இயேசு நிலைகள் நம்முள்

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-5-08-2023*

# காவேரி மாதவி

மங்கை எழில் கண்டு மனம் மயங்க, செவ்விதழ்த்தேனும்,
செந்தாமரை முகமும், சேல்விழிப் பார்வையும் -காமன்
கணையாய் என்னை வீழ்த்த, இன்புற்றுத் தவித்த என் மனம்
இவளின்றி வாழ்வில்லை துன்புற்றுத் துடித்த காதல் இதயம்

நாணிக் கனிந்த கன்னங்களோ கிண்ணம் பழம்
உண்டு பசியாறு, விருந்துக்கு அழைத்த விழிகளோ
குவளை இனம், மொழியிலோ கோகிலத்தின் கானம்
பொன் மேனியிலோ அழகின் வண்ணக்கோலம்

இட்ட அடியில் அன்னம் மயங்க, எடுத்த அடியில்
பங்கயம் சினுங்க, வாசமல்லிகை குழல் நின்று மணக்க
கண்பட்டு நெஞ்சம் காதல் நோயுற்றதென்ன
காமன் கணைபட்டு இதயம் புண்பட்டதென்ன?

நடையிலோ உலாவும் வான நிலவு, நாட்டியத்தில் இவளோ
பரதம் காணாத கனவு, கண்பட்டு விழிகள் தேனைச் சுவைக்க
மொழி கேட்டு செவிகள் கவிதையை இரசிக்க, காவிரியோரம் உலாவிய
மாதவி கண்டு கலங்கி நின்ற புதிய கோவலனாய் நான் இன்று

மின்னல் இடையில் மேகலை சினுங்க, பங்கயப் பாதங்களில்
சிலம்பு இசைக்க- கைவளையல்களும் கவிதை படிக்க, குண்டலங்கள்
காற்றில் ஊஞ்சலாட மாசறு முத்தோ-வலம்புரி சங்கோ-நேசத்தால்
நெஞ்சில் படரும் முல்லைப் பூங்கொத்தோ, காதல் வாசம் மணக்க
கைதலம் பற்றிய, கண்ணகி கண்டு, காமம் துறந்தே காதல் பூண்ட மனம்

ஆடல் மகளும் வாடிப்போக-மாலையிட்டவள்
துணையோ வாழ்வைப் பூவனமாக்க
பிறன் மனை நோக்காப் பேராண்மை காக்க
கணப்பொழுது கலங்கிய மனமும்,தெளிந்து மகிழ்ந்ததே
தேவியைப் புகழ்ந்ததே

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-5-08-2023*

# காவியகாலத்துப் பெண்மை

---

சுந்தரி சுகம் காணாத பீஷ்மனோ, சுந்தரச் சகோதரிகளைச்
சிறையெடுத்து, சுயம்வரத்தை பாழாக்கிய அவலம்,
படைப்பலத்தால் காந்தாரியின் கனவுகளை கலைத்து
வாழ்வை குருடாக்கிய துயரம்

ஐவருக்கு மனைவியாக்கி-அழகிய பெண்மையை ஆண்டதும்
படை, குடை, கோல் தோற்று, சகோதரையும்,
தன்னையும் தோற்றதும், பந்தயப் பொருளாய்-பாஞ்சாலியை
சூதாடித் தோற்றதும் தருமனுக்கோ தீராத அவமானம்

ஆடை குலைந்து பெண்மை சீரழிய, ஆணையிட்டவன் காமுகன்
வாளாவிருந்த அவையில்- போராட ஆணாய் யாருமில்லை
அலிகளும், காமுகரும் ஆளும் உலகு அன்றும்

ஆணாதிக்க உலகில்-சூதாடியும் தர்மவான்?
நாடாளும் மன்னவனோ அந்தகன்,
பரந்தாமனால் தன்னைக் காத்த பெண்மை
கணவனான மாவீரருக்கோ மாறாத சிறுமை

ஊர்வசியைப் புணர்ந்து-ஊனக் காமம் தணித்து, கர்ப்பிணியை
கைவிட்டு-காடுபோன விசுவாமித்திரனும் தவசியோ?
நள்ளிரவில் மாலையிட்ட மங்கையை, நடுக்காட்டில்
கைவிட்டோடிய நளனும் ஆண்மகனோ?

கன்னி மனமும், காலைப் பொழுதும் அறியாத மூடன்
அகலிகையை, கல்லாய் சபித்த-கௌதமனோ அண்ணகன்
சீதையைச் சிறையெடுத்தவனோ பெரும் சிவபக்தன்
பூச்சூடிய பெண்மையை நெய் வளர்த்த தீயில்-நீராடி
தீச்சூடி வா என்ற ***கணவனோ*** அவதார புருஷன்

கர்ப்பிணி வனவாசம் செல்லப் பணித்த மன்னவனோ ராஜாராமன்
ஸ்ரீராமன், காலடி பட்டு கல்லான அகலிகை பெண்ணாக
சொல்லடிபட்டு பூவான சீதை மனமோ கல்லாக -ஸ்ரீராமனை
தள்ளி வைத்து தாயிடம் சரணடைந்த தாய்மையோ மேன்மை

வேசியிடம் சுகம் காணப் பர்த்தாவை
கூடையில் சுமந்த நளாயினி. காமசுகம்
வேண்டி இரந்தவளைச் சபித்தவனோ முனி

காவியத்திலும் பெண்மையை இழிவு செய்த மடமை
கலியுகத்திலும் தொடரும் கொடுமை என்றுதான் ஓயமோ?
பெண்மை தலை நிமிர்ந்து வாழுமோ?

அம்மனைத் தெய்வமாய் வழிபடும் மண்ணில்- நாளும்
மங்கையர் பாலியல் வல்லுறவுக் ஆளாகும் கொடுமை
இந்திர, சந்திர, யயாதியும் இன்றும் வாழக்-காம சூத்திரம்
வேதமானதோ? கற்பழிப்பு தாந்திரீக வழிபாடானதோ?

காமுகரை அழிக்கச் சட்டங்கள் போதாது
கன்னியரே மறவாதீர்-துர்க்கையும் நீங்கள்-
பரமசிவன் உடலில் உருத்திர தாண்டவமாடிய
காளி மாதாவும் நீங்கள்.

சீதையாய் எழுந்து ஸ்ரீராமனைத் தள்ளி வையுங்கள்
சிகண்டியாய் போராடி பீஷ்மனை வீழ்த்துங்கள்
துச்சாதனன் குருதியால் கூந்தலை முடியுங்கள்
புதிய பாஞ்சாலி நீங்கள்

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-5-08-2023*

# காவியமா? நெஞ்சில் ஓவியமா?

---

கண்பார்த்து நெஞ்செழுதும்-காவியக் காதல்போல்
பேரின்பம் உலகில் ஏதுண்டு? புண்பட்டு, கண்ணீர் சிந்தி
தேவதாஸ்- பார்வதியாய் துன்புறும் வேதனையும்
உண்மைக் காதலில்தான் உண்டு

சீதையின் காதலிலும் கண்ணீர், பாஞ்சாலியின் இதயத்திலும் செந்நீர்,
கண்ணகியின் சீற்றத்திலும் கணவனை இழந்த காதலின் நெருப்பூ,
மௌனித்த மாதவியின் சலங்கையிலும் ஆடிக்களிக்க,
இரசித்துப் பாராட்ட, கோவலன் இல்லையென்ற தவிப்பூ

சகுந்தலையின் நெஞ்சில் கணவனே தன்னை மறந்த
பெருந்துடிப்பு, கணவனோடு காடேகிச் சிறையிருந்த சீதை
தீக்குளித்து, மீண்டும் காடேகிட-காதல் மனதிலும்
சீதாராமனா, இராஜாராமன் என்ற கசப்பூ

பந்தயப் பொருளான பாஞ்சாலி , மானம் காக்கப்
போராடிய அவலம், பிள்ளையெல்லாம் பறிகொடுத்து
சோகத்தாயாகி-மகாராணியாய் முடிசூடியும்
மனதில் நிலைத்த இமயத் துயரம்

சிவதனுசை முறித்து மாலையிட்ட சீதா ராமன்
சிறையிருந்த சீதையை தீச்சூடி வா என்றான்,
கர்ப்பிணி மகாராணியை வனம் அனுப்பி,
காதல் சீதையின் மனதை ராஜா ராமன் முறித்தான்

மச்சத்தை வீழ்த்தி மாலையிட்ட மாவீரனுக்கு
மனைவியின் மானம் காக்க முடியவில்லை-பஞ்ச
பாண்டவருக்கு மாலையிட்ட -பாஞ்சாலியின் மனப்பாரம்
குருதியால் கூந்தலை பூசி முடித்தும் தீரவில்லை

கசையும், வசையும், தாங்கி இதயம் பாரச்சிலுவை
சுமக்க காதலும் கல்வாரிப்பயணம்தானோ?
அன்பின் புது வேதம்தானோ?

பருவத்தில் வரும் காதல் மயக்கமும் பாதிவரைதானோ?
கண்டு கண்களும் மயங்க-அழகை உண்டு நெஞ்சமும் கிறங்க
காதல் இதயங்களின் சங்கமம்தானோ?-வாழ்வில்
ஆசையும், மோகமும் வந்து போகும் பருவங்கள்தானோ?

காணத்தவித்த நெஞ்சம், கண்டு குதூகலிக்க-பேரழகை
கண்களும் உண்டு காதல் பசி தணிக்க, -பேசத் தவித்து ,மொழியோ
பேச்சிழந்து மௌனத்தை இசைக்க- வானத்தவராய் மலர்ந்த இன்ப உறவு,
அலையும், கரையுமாய் தழுவிக்களித்த காதலின் இன்பப்பொழுது.

கண்டு வியந்தேன் அணங்கோ பேரழகு-செவிகள் உண்டு சுவைக்க
மொழியோ இசை வடிவு, சுவாசத்தில் வாசம் மணக்க-
பூவையோ பூவினும் வாசம்-காதலாகித் தவித்திட
பூவாசம் வீசும் இதயமோ பூவை வசம்,

கண்பார்த்து நெஞ்செழுதிய காவியம்,
மண்பார்த்து நாண, காதல் மனம் வரைந்த,
வண்ண ஓவியம், இவளோ காதலின் புது ஸ்வரம்
என் நெஞ்சினிலே காதல் சுரம்.

கண் நோக்க கண்மலர்ந்த நாணம்
பொன்மேனியிலோ நாணத்தின் செங்கோலம்
மண்நோக்கி மையெழுதிய விழிகள் மையல் சொல்ல
தையலால் கொலுசில் ஒலிக்கும் காதல் கட்டியம்

கைவளையல் சினுங்கி காதில் கட்டிக்கொள் காதல் சொல்
எனக் குசுகுசுக்க, செவ்வாயில் முத்துப் புன்னகை,
சிறு நுதலில் குங்குமம், கார்குழலில் மலர் சூட
என்னைக் கண்களால் மாலையிட்ட மங்கை

இதழமர்ந்த புன்னகை எழில் கூட்ட-கார்குழலமர்ந்த
மலர்களும் வாசம் கூட்ட, கயல் விழிகள் காதல் மொழி பேச
தையலாள் மொழியில் குயிலின் கானம்
நடையிலே கலாபமயிலன் கோலம்.

மனதிலே மைதிலியைக் கண்ட ஸ்ரீராமனின் தவிப்பு
மங்கை உள்ளத்திலே சூடிக்கொடுத்த ஆண்டாளின் களிப்பு
மையிட்ட விழிகள்-காதலுக்கு மொய் எழுத
கண்பட்டு நாணிச்சிவந்த வெண்பட்டு கலைவாணி
கண்களால் என்னை மொய்த்த காதல் தேனீ

வண்டு மொய்க்காத தேன் மொட்டு, கார்குழலில்
மணக்கும்  மல்லிகை மொட்டு கண்பட
நாணிய காதல் சிட்டு, மையல் கொண்ட மனது
காதல் கவிதை நெய்யும் பொழுது

ஜோடிகிளிகளாய்க் கொஞ்சியதும் கனவானது
ஒற்றைக் குயிலாய் உருகி கரைவது இன்று நிஜமானது
காதல் என்பது கனவோ, கற்பனையோ?
கானல் நீரோ, பருவத்தில் ஒரு நிகழ்வோ

விழி வடித்த நீராலும் இமயச்சோகம் கரையவில்லை
மொழி வடித்த கவிதையிலும் அசோகவனச்சீதையின் நிலை
வெண்மேகத்தை தூதுவிட்டேன், சோகத்தில் கறுத்து
கார் முகிலாய் கரைந்ததடி

நாரையைத் தூதுவிட்டேன்-நங்கையை தேடி
களைத்து காணாமல் போனதடி-அன்னத்தை
தூது விட்டேன்-என் அழகு தமயந்தியின்
சேதி இன்றும் வரவில்லை தோழி

நினைக்கத் தெரிந்த மனதிற்கு, மறக்கத் தெரியவில்லை
சூடிக்கொடுத்த ஆண்டாளுக்கு என்னைச் சூட மனமில்லை
பாடிக்களித்த மீராவுக்கு என் மீது பரிவில்லை

நினைக்க வைத்தவளுக்கு மணம்முடிக்க இதயமில்லை
நினைவில் நின்றவளை மறப்பதற்கு-காதலுக்கு
மதுவைத்தவிர வேறு வழி தெரியவில்லை

உண்மைக் காதல் எல்லாம் கண்ணீர்க் காவியமோ?
தேவதாஸ் பார்வதியின் வண்ணம் கலைந்த ஓவியமோ?
காதலாகி இன்பக்கடலில் நீந்தி களிப்புற்ற இதயங்கள்
கண்ணீர் கடலில் மூழ்கித் தவித்திட-காதலும்
மாயப் பொன்மான்தானோ? சொல் மனமே

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-6-08-2023*

# கோலமயில்

---

வறுமையின் வண்ணங்கள் வாழ்வை இருளாக்க
வசந்தமும், விடியலும் அறியாத வாழ்வில்
கஞ்சும், கூழும் அமுதாக –குப்பத்துக் குடிசை
கோலமயிலின் கூடானது.

போதையிலும், சூதாட்டத்திலும், வாழ்வை அழிக்கும் தந்தை
நாளும் மதுபோதையில் தாயின் உழைப்பை கொள்ளையடிக்க
வன்புணர்வுாய், தாயிடம் காமம் தணிக்க, போர்வைக்குள் முடங்கி-
பார்வை அடக்கி பொல்லாத உலகை கண்ணீரால் சபிக்கும் பெதும்பை

பள்ளி வாழ்வு பகற்பொழுதில் இன்பமாக
பசியும், படிப்பும்-தாய் மடியில் இன்பமாக
சூதாடித் தந்தை கண்படும்போதெல்லாம்
கழுகை கண்ட குஞ்சாய் அஞ்சும் நெஞ்சம்.

தாயின் தங்கத் தாலியும்-நாள்பட மஞ்சள் கயிறாக
கனவு குடியிருந்த மைவிழிகளில் கவலைச்
சிலந்தி வலை பின்னிட, பொங்கிப் பூரித்த பூவழகும்-
வறுமைப் புயலில் புழுதியில் விழுந்த பூமாலையானது.

வங்கக் கடலில் மாரியில் ஒரு புயல்-
வறுமைப் புயல் வாழ்வை அழிக்க-தந்தையோ
நாளும் வீசும் ஓயாத வாழ்நாள் புயலானது.

பிள்ளையின் கற்பை விற்றுக் குடிக்க
குடிகாரத் தந்தைக்கு, பெற்ற பிள்ளையும் பொருளானது
பிள்ளையைக் காக்க, வாளெடுத்து சிரமரிந்த தாய்க்கு
கணவனும் காமுகன் என்ற நிலையானது
வாழ்வு தந்தி அறுந்த வீணையானது

ஏழைத்தாய்க்கு திருமணம் சிலுவையாக,-சிறுமிக்குக்கு
கல்வாரியாக, குடிகாரனக்குத் திருவிழாவானது.
குடும்பம் ஒரு கோயில் கேள்வியானது?
ஏழைகளின் வாழ்வோ நடைப்பிணமானது.

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
*Pax Ravichandra-7-08-2023*

# கொங்குதேர் வாழ்க்கை







வண்ணமலர் அமர்ந்து, வாசம் முகர்ந்து, தேன் சுவைக்கும்
வண்ணத் தும்பியே, பூ வண்ணமும், மலர் வாசமும் நீ அறிவாய்
என் எண்ணமும் நீ அறியக் கேட்கின்றேன்-என்னவள்போல்
வண்ணமும், வாசமும் ஒன்றான பூவை நீ கண்டதுண்டா?

என்னவள் செவ்விதழ் அமுதச் சுவைபோல்
தேனும் நீ சுவைத்ததுண்டோ?
மனம் கிறங்க உன்னை மயக்கிய மலரில்
காதல் சுவையுமுண்டோ? சொல்.

ஒரு மாலைக்குள் வாடும் மலரல்ல
மணமாலைக்குள் மணக்கும் மலரிவள்
காயாகி, கனியாகும் பூப்போல்
தாரமாகி. தாயாகும் பூவையிவள்

பசியாறி பறந்துபோகும் விருந்தாய் நீ
காதல் பசியாறித் காதலனாய், கணவனாய்
காதலைச் சுவைக்கின்றேன்-நாளும் ஒரு பூ உனக்கு
எந்நாளும் வாடாத-பூவையோ எனக்கு

சொல்வாய் வண்ணத் தும்பியே என்னவள்போல்
ஐம்பூ விளையும் அமிர்த நிலம் ஏதுமுண்டோ?
வண்ண மலரும்தான் உண்டோ? பூவே பூச்சூடும்
அழகை எங்கேனும் நீ கண்டதுண்டோ?

முகம் தாமரை, முறுவல் முல்லை, விழிகளோ குவளை
செண்பக மூக்கில் சிவப்புக்கல் மூக்குத்தி,-அமுதூறும்
செவ்வாயோ குமுதம்-செங்காந்தளோ விரல்கள்-செம்
பங்கய மொக்கே தனங்கள், பங்கயப் பாதங்கள்

குழலோ கார்வண்ணம், இதழ்களோ செவ்வண்ணம், விழிகளோ
நீலவண்ணம், பற்களோ முத்தின் வண்ணம், முகமோ மூழுமதியின்
வண்ணம், கழுத்தோ வெண்சங்கின் வண்ணம், தோள்களோ மூங்கில்
வண்ணம், தொட்டால் மணக்கும் மேனியோ சந்தனக் கிண்ணம்.

எத்தனை வண்ணங்கள் இவளில் அத்தனையும் காண
காதல் நெஞ்சும், கவிஞன் மனமும் வேண்டும்
கன்னிப்பூச்சூட காதல் வரம் வேண்டும்.



என்னவள்போல்  கண்மயங்கும் வண்ணமலரை
காதல் வாசம் வீசும் புது மலரை
மலர் தாவும் மதுவண்டே
எங்கேனும் நீ கண்டதுண்டா? சொல்.

**கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின்இ மயில் இயல்**
**செறி எயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ?   நீ அறியும் பூவே-**
(இறையனார்)

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-7-08-2023

# கொரோனா-ஊரும் உறவும்

---

தேனீ மொய்க்காமல் தினம் பூக்கும், வண்ணமலர்களும்
வாடிக் கிடந்திட, காதலரின்றி காயும் நந்தவனம்
மானுட மனமோ பாலையான தினம்

நண்டு விளையாடும் கடலோரம் நாதியற்று வெறிச்சோடிக்கிடக்க
அலைகளும் கரைவந்து மனிதரைத் தேடுது-மகிழ்வோடு கால் நனைத்து
விளையாடும் மழலையரைக் காணாமல், மனம் நொந்து வாடுது
காதலரைக் காணாமல் கரைமோதிப் புலம்புது.

உரசி நடந்த காதலரும் ஒதுங்கி நடக்க
செவ்வாயா இல்லை செந்தேன் மலரா எனச் சிலாகிக்க
முத்தம் சிந்தி சிவந்த இதழ்களும்-அச்சத்தால்
முகக்கவசத்தில் சிக்கித் தவிக்க அவல வாழ்வு

நெய் தடவிய நீள் கூந்தலும் மலரின்றி வாட
மை எழுதிய சேல்விழிகளும் அச்சத்தில் சோர-
காணத்தவித்து கண்டு மகிழ்ந்த காதலும்
செல்போனுக்குள் முடங்க -காதலர் வாழ்வு.

வானொலியும், காணொளியும் அச்சத்தை கூட்ட-
வாழ்வு வட்டமா? , நேர் கோடா? புரியாது மனம் தவிக்க
நாளும் கல்லறைத்தோட்டங்களில் உறங்கிடும் உறவுகள்
ஆலய வாயில் நின்று ஆசி வழங்கிக் கலங்கும் அருட்பணிகள்.

வல்லரசுகளும் வலுவிழந்து பணிய-நலம் வேண்டி
நல்மனங்களும் நாளும் இறைவனை இரந்து கரைய
மரண தூதனா?, மனம் மாறி -இறையரசைத் தேட
மானுடரை எச்சரிக்கும் இறைதூதனா, கொரோனா?

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-7-08-2023

# கொத்தடிமைகள்

நடைபாதையில் கூடுகட்டி-கூலிகளாய், நகர் செழிக்க
உழைத்த மக்கள், கொரோனோ அச்சுறுத்தலில்
நகரங்கள் முடங்கிட, புகலிடமின்றி நாதியற்ற ஏழைகளாய்
உயிர் பிழைக்க ஊர் நோக்கி ஓடிய அவலங்கள்

ஊர் நோக்கிய பாத யாத்திரையில்-உடைமைகள்
தலையிலும், தோளிலும் சுமையானது-ஏழ்மையின்
பெருஞ்சோகம் -இலட்சக்கணக்கான மனங்களில்
இமயச் சுமையானது, தீண்டாமை நிதரிசனமானது

பறை நாய்களாய் நடந்த யாத்திரை,
தீர்த்த யாத்திரை அல்ல, புதிய தண்டி யாத்திரையுமல்ல
தாழ்தப்பட்ட மக்களின் தக்கன பிழைத்தலுக்கான
சத்திய சோதனை-தீண்டாமைத் தீ மிதித்தல்

பசியில் வாடி, வெயிலில் காய்ந்து, தெருவில் உறங்கி,
மழையில் குளித்து, விரட்டப்பட்ட கூட்டத்திற்கு கை கொடுக்க
தெய்வங்களும் இல்லை-மனக்காயங்களுக்கு மருந்திட
நல்ல சமாரித்தன்களும் இல்லை.

பசியும், பிணியும் வாட்ட-பரிதாபமாய் பல நூறு மைல்
கடந்த பல நாள் யாத்திரை, ஊர்ச்சேரியில் முடிய
வாழ்வோடு விளையாடும் வறுமை
உயிரோடு விளையாடும் கொரோனாவின் கொடுமை

பசிப்பிணி நீங்க -ஏழையும் கடன் பட்டான்
தன் குடும்பமே கொத்தடிமையாய் மாறிட
சேவை செய்து கடன் தீர்க்க உடன்பட்டான்

தக்கன பிழைத்தல் நீதியாக
நடைப்பிண வாழ்க்கை ஏழைக்குச் சாபமானது,
ஏழையின் ஆயுட்கால உழைப்போ
செல்வனுக்கு வரமானது.

கடன் பட்ட குடும்பங்கள்-கைதிகளாய்
காவல் லயன்களில் வாழ, காலை முதல் மாலை வரை
களி குழைத்து. அச்சில் பதித்து, காய வைத்து கல்லாக்கி
கடனடைக்கும் கடுழியம் தொழிலானது

கால்வயிற்றுக் கஞ்சியும், கூழும்
நாளும் உணவாக-கால் நீட்டி உறங்க
அறையின் நீளம் போதாது-கண்ணீரோடு ஒலிக்கும்
அழுகை கடவுள்களுக்கும் கேளாது

தாயும், தந்தையும் நாளெல்லாம் உழைக்க
பெற்ற ஒரே மகனோ பாடம் படிக்க, வட்டியைக் காட்டி-
வஞ்சகமாய் சிறுவன், படிப்பை குலைத்து
கூலியாய் சிறுவனை உருவழித்த கயவன்.

குறித்த எண்ணிக்கையில் நாளும்
கல் அறுத்தல் கூழியத் தண்டனையானது.
மாலையில் விளையாட்டு என்பது-சிறுவனுக்கு
பழங்கதையாய், கனவாய்ப் போனது.

பசுக்களும், பறை நாய்களும் சுதந்திரமாய் உலாவர
கற்சிலைகளும், சித்திரங்களும் கடவுளாய் மாறிட
பூஜைகளும், புனஸ்காரங்களும் மலிந்த தேசத்தில்
தீண்டாமையும், வறுமையும் சாகா வரம் பெற்ற அரக்கரானது.

பள்ளி முடிந்து விளையாடிச் செல்லும் சிறுவர்கள் கண்டு
மனம் களிக்க, நெஞ்சம் சிறகடிக்க, பார்த்து இரசித்த சிறுவனை
வேலை செய்யென-கங்காணி அடிக்க, காக்க வந்த
தாயும் அடிபட்டாள், தந்தையும் உதை பட்டான்.

காயும் கல்லிலும் ஈரம், கல்லான மனதிலோ
காயாத கொடூரம், நெற்றியிலோ பட்டை-கையிலோ சாட்டை
ஏழைகளின் உழைப்பை உறிஞ்சிடும் முதலாளியோ
அட்டையினும், கொடிய இராட்சத அட்டை

சோதனையிட மனித உரிமை அலவலர் வருகிறார்
சேதி கிடைத்தவுடன் கூலிகளை, லொறியில் ஏற்றி
கண்காண இடத்துக்கு கடத்திய செல்வன்
பெற்றோரைக் காணாது கதறிய சிறுவன்

கதறியவனை அடித்து சங்கிலியில் பிணைத்து, கத்தி, சத்தம்
போட்டால் தாயும், தந்தையும் காணக் கிடைக்காது,
அறைக் கதவை தாளிட்டு, அச்சுறுத்தி மறைந்த கடி நாய்கள்,
கண்ணீர் பெருக, காயங்கள் வலிக்க சிறைப்பட்ட செம்மறி

கொத்தடிமைகளை விடுவிக்க காவல் துறையோடு வந்த
மனித உரிமை ஆர்வலர்கள், தேடியும், காணாது திகைக்க
கையூட்டு வாங்கி பிழைக்கும் காவலரும், கங்காணியும் பழிக்க
சங்கிலியை இழுத்து உதிரம் சிந்த, சாளரம் வழியே கதறிய சிறுவன்

முதலாளியின் பசப்புரைக்கு மயங்காது
அச்சுறுத்தலுக்கும் -அஞ்சாது,
உண்மையை உரைத்த சிறுவன்,
உதயமாய் மலர்ந்த புதிய சுதந்திரம்

இந்திய சுதந்திரம், இன்றும் தலித்துக்கும், தாழ்தப்பட்டவருக்கும்
எட்டாக் கனியாக, மகாத்மாவும் -அம்பேத்காரும் சிலையாக
சாதியம், வறுமை, தீண்டாமை-வாழும் நீதியானது
புராணமும், கட்டுக்கதைகளும் கடவுளுக்கு சான்றானது

சிறுவன் கண்ணீரில் கல்லும் கரைய-
காயம் பட்ட மேனி பட்ட துயரைச் சொல்ல
திருப்பதி வெங்கடாஜலபதிக்கு காணிக்கை குறையவில்லை
பதுக்கி வைக்கும் கறுப்பு பணத்திற்கும் அளவில்லை

கடவுளும் கற்பனை என்பது உண்மை
பொதுவுடமை, சமத்துவம் என்பது
கார்ல் மார்க்ஸின் சொர்க்கலோகக் கற்பனை

காய வைத்த ஈரக்கல்லில் கால் தடம் பதிய புதிய சுதந்திரம்
காண நடந்து சென்ற சிறுவன், கல்லில் பதிந்த தடம் காய்ந்து
பட்ட துன்பத்திற்கு சாட்சி சொல்ல-நெஞ்சில் பதிந்த காயம்
ஆறாத ரணமாய் வாழ்நாளெல்லாம் வலித்தது

விடியலில் கூவும் சேவல் குரல் கேட்டு மனம் சொன்னது-
விடியல் உனக்கே சேவலே-ஏழை எமக்கல்ல-
கரையும் புள்ளினங்களே காலை உமக்கே-எமக்கல்ல
விரிந்த வானத்தில் பறக்கும் சுதந்திரப் பறவைகள் நீங்கள்-
தீண்டாமைக் கூண்டுக்குள் சிறையிருக்கும் ஆயுட் கைதிகள் நாங்கள்.

இன்றும் உலகில் கோடிக்கணக்கில் கொத்தடிமைகள்!
***ஜெய் ஹிந்- வந்தே மாதரம்! ஜெய் ராம்!***

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
Pax Ravichandra-7-08-2023

# கோவிட் 19

---

உலகை அச்சுறுத்தும்-உயிர்க்கொல்லி கொரோனா
சொல்லும் சேதிதான் என்ன? பிரபஞ்சம் விபத்தல்ல,
பிறப்பும் ஒரு விபத்தல்ல, இறை சாயலாய் மனிதன்
இறை தரும் பெரும் கொடையாய் வாழ்வு

We are here to awaken form
our illusion of Separateness-

The world is afflicted by death and decay.
But the wise do not grieve,
having realized the nature of the world-Buddha

"**இருப்பே**" நாம், விழிப்புணர்வில் நம்மை அறிதலே
நம் அழைப்பு, உன்னைப்போல் உன் அயலானை நேசி
உன் எதிரியையும் நேசி-காலம் கனிந்த நேரமிது

நம்மை நாம் நேசித்தால்-தனித்திருப்போம்
நோய் தொற்றுகை பரவாமல் விழித்திருப்போம்-
பிறர் அன்பால் பசித்திருப்போம்.

Stay at home-self Isolation
Maintain social distancing

கொரோனாவை தடுக்கும் முன்னெச்சரிக்கை முறைகள்.
நம் வாழ்வு நம் கையில், நாம் தொற்றுக்குள்ளாகாமல்
நம்மால் பிறர் தொற்றுக்குள்ளாகாமல் காப்பது-அன்பு.

உண்மையில் நிலைத்து வாழ்வைப் புரிந்து
பேச்சில் கனிவு, நற் செய்கை -நல்முயற்சி வாழ்வாக
ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனப் புரிந்து
மானுட உய்விற்காய் நாம் பணி செய்வோம்

பிரபஞ்சத்தோடு இணைந்ததே வாழ்வு, எல்லைகளில்லாப்
பிரபஞ்சத்தோடு எம் இணைப்பு. நான், நீ.
பிரபஞ்சம் வேறல்ல, எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று

மடிந்த வித்து முளைக்கின்றது-விடியல் தேடி
நாற்று ஒளியை நாடுகின்றது
அக இருளைக் களைந்து ஒளியைத் தேடுதலே வாழ்வு
இருளல்ல நாம் ஒளியே நம் இருப்பு

"**ஒளி உண்டாகுக**" இறைவனின் முதல் வார்த்தை
தொடுதல் தாண்டி-தனிமை நம் தியானமாக
வாழ்வின் அர்த்தம் தேடுதலாக, அகப்பார்வை அறிய
மூன்றாம் கண்ணாய் விழிப்புணர்வு

உடல் அழிகின்றது-ஆன்மா அழிவதில்லை
பாதை மாறும் நேரமிது-மனமாற்றத்திற்கு
விடுத்த அழைப்பாய்-யோனாவின் புதிய பரிணாமமாய்
உயிர்க்கொல்லி கொரோனா?

கண்ணிற்குத் தெரியாத வைரஸ்-மானுடத்தை ஆட்டிப் படைக்க
இது விபத்தல்லா, தக்கன பிழைத்தலின் தெரிவல்ல-
நம்மை நாம் அறிய நம் தேடலுக்கான இறை அழைப்பு

**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
Pax Ravichandra-7-08-2023

# Lesbos அகதி முகாம்

குண்டுத் தீயில் வெந்திடும் தேசம், குருதி மழையில் நீராடும்,
குடில்களும், கோபுரங்களும் ஒன்றாய்த் தீய்ந்து கருகிட
ஓடும் வாகனங்களும், ஓதும் பள்ளிகளும் வெடித்துச் சிதறிட
தலிபான்கள் வெறிக் கூத்தால் எரி நரகாய் மாறும் ஆப்கானிஸ்தான்

வண்டுகளும் மலர்த்தேனின்றி வாடும், மழலைகளும்
தாய்பாலின்றிச் சோரத், தாய் மனங்கள் பாலையாய் காயும்
அழுகையும், புலம்பலும் நேரகாலமின்றி-அல்லாவை கூவி அழைத்து
ஐவெளை கடந்த அவலத் தொழுகையாய் மாறும்

கண்ணீர் வரண்டு விழிகள் காயும், தாய்பால் இன்றி
முலைகள் சோரும், உணவு தேடி வயிறுகள் எரியும்
உணர்வுகள் பொசுங்கி இதயங்கள் துடிக்கும்.

மறையும் பொழுதாய், உதிரும் மலராய், உறவுகள்
நாளும் மறைய, கண்ணீர் வெள்ளம் போடும்
அகதி வாழ்வு நடைப்பிணமாய் நாறும்

தரையும், கடலும் கடந்து, உயிர் வாழத் தேடிய புதுவாழ்வும்
அகதி முகாமில் அங்கவீனமானது- அகதிமுகாம் திறந்த
சிறைக்கூடமாக, ஆயுட்கைதியான வாழ்வு எரி நரகானது

கண்ணீரில் கரையாத சோகங்கள் நெஞ்சில் ஓயாது அலைமோத
செந்நீரால் எழுதிய பிரிவுகள் ஆறாத செங்காயமாய் வருத்த
அகதியான தாயும் குழந்தையும் அகதி முகாமில் கைதியாய் மாறிட
எமனாய் அண்டிவரும் கொரோனா அச்சத்தைக் கூட்டும்

லெஸ்பாஸ் தீவு, கிரேக்க அகதி முகாம் அகதிகளுக்கு எரி நரகானது.
உயிர்கள் மடிய, ஓரிரவில் முகாம் தீக்கிரையானது.
வானம் கூரையாக-பூமி மெத்தையாக
தாயும் சேயும் தேடிய புதிய உலகு பகற் கனவானது.

நீருக்கும், உணவுக்கும் நீண்ட போராட்டம் தொடங்க
நோயுற்ற குழந்தைகளுக்கு வைத்தியம் வானமுதானது,
முள்வேலிக்கப்பால், கண்ணீரால் வுழு செய்யும் தாய் மனம்
வல்ல அல்லாவைக் தொழுது களைக்கும் தினம், தினம்

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க, எல்லோரும் நலம் வாழ்க***
Pax Ravichandra- 8-7-2023

# மடிமீது தலை வைத்து விடியும் வரை தூங்குவோம்

---

நிலவு மலரும் பொழுதில், நீலக்கடலோரத்தில்
நித்திலமே, உன் மடிமீது தலைவைத்து விடியும் வரை
பேசிய பொழுது-நெஞ்சில் இன்றும் தேனாய் இனிக்குதடி-
நினைக்கையில், நெஞ்சம் சிலிர்க்குதடி கவிதை பிறக்குதடி

தென்றல் நம்மைத் தழுவிச் சொல்ல, தேன் நிலவும் அள்ளி அணைத்தே
அன்பைப் பொழிய அலையும், கரை தொட்டு இசைமீட்க-அன்பே
கண் மலராமல் பேசியது காவியமானதடி

மண்ணும், மழையுமாய் மனங்கள் கலந்திட
மனங்கள் தழுவிக் களித்த காதலில்
உயிர் மெய் கலந்து ஒன்றானதடி-நாம்
இருவரல்ல ஒருவர் உண்மையானதடி

நிலவு பூத்த இரவில், நெஞ்சில் பூத்த காதலால்
நீ தந்த செவ்வாய் முத்தங்கள் முக்கனியிலும் இனிதடி
முத்தமிழாய் செவ்வாயும் இனிக்குதடி

மதுமலர் கூந்தலில் மல்லிகை மணம் சொரிய, சந்தன மேனியில்
நாணம் வந்தனம் சொல்ல, அன்பின் ஆரோகணத்தில்
ஆணவம் கழிந்திட, அன்பே என் ஆருயிரே என காதல் மனம்
கவிதை பாட, வாழ்வு ஒளி மயமானதடி

செப்பும் மொழியும் கவிதையாக, செவ்வாய் முத்தமும் மலைத்தேனாக
அள்ளிக் குவிந்த அழகை-மெல்ல அணைத்தே என்னை மறந்தேன
துள்ளித் தவித்த இதயமும் ஓயாமல் துடித்திட-பள்ளியறைப்
பாடங்களை, களித்தே களைப்பின்றி நாம் படித்தோம்

கடுகளவு நெஞ்சுக்குள், கடலளவு பொங்கும் காதல்
அழகடி, மலரளவு மனசுக்குள் மலர்த்தேனாய்
இனிக்கும் காதல் அழகிலும் பேரழகடி

சங்கில் ஒலிக்கும் சந்தம்போல், என் நெஞ்சில் ஒலிப்பது
உன் நினைவே, வங்கக் கடலின் அலைகளைப்போல்
நித்தம் வந்து நெஞ்சில் மோதுவதும் அன்பே உன் நினைவே

ஆடிப்பெருக்காய் இதயம் பொங்க, ஆனந்தப் பூங்காற்றாய்
நெஞ்சில் நீ உலாவ, அணைப்பின் நெருக்கத்தில்
இதயங்கள் களிப்பில் துடிக்க, காதலானது இதயமடி
கவிதையானது எண்ணங்களடி

என்னுள் நீயாகி, உன்னுள் நானாகி
நம்முள் நாம் கலந்து-
உமையொருபாகனாகி-சிவ சக்தியாய் ஆடிய
ஆனந்த தாண்டவம் பேரின்பமடி

விடியும்வரை, நிலவின் ஒளியில் விழித்திருந்து
காமத்துப்பால் அருந்தி காதலைச் சுவைத்தோம்
கனவின் மடியில் ரதி மன்மதனாய் உலாவி
காதல் துய்த்தே நம்மை நாம் மறந்தோம்

கண்ணில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, களித்த இன்பம்
கல்லில் பொறித்த எழுத்தாய் நெஞ்சில் நிலைக்க-
உன்னில் நானும், என்னில் நீயும் எழுதிய கவிதை
காதல் காவியமானதடி-

மோகமுள் களைந்து, காமசூத்திரம் கடந்த இன்பச்சூழலில்
காதல் கிளிகளாய் கிள்ளை மொழி பேசி
காதல் குயில்களாய் கானம் பாடிட
அலைகளும் காதலாகித் தாளம் கொட்டியதடி

அணுவிற்குள் அணுவாகி-அன்பு கலந்திடும் சங்கமமாகி
இசையோடு கலந்த பண்ணாய் , ஈருடல் கழித்து ஓருடலாகி
ஒருவரோடு ஒருவர் கலந்த பொழுதது

இரவு கழிந்தது தெரியாமல்-நிலவு மறைந்ததும் அறியாமல்
பொழுது புலர்ந்ததை புள்ளினம் சொல்லிட, காஞ்சி இருக்க
கலிங்கம் களைந்த அழகில் , நாணம் இட்ட கோலங்கள்
நங்கை உன் பேரழகை கூட்டியதே

ஆனிப்பொன்மேனியின் அழகு என்னை மயக்க, நாணிய உன் வதனத்தில்,
நானும் என்னை இழக்க, மோகனமும், பூபாளமும் இதயத்தில் பொங்க
காதல் வேள்வியில் ஆகுதியாய் நாமடி,மோகம், மறைந்து, காமம் கழிந்திட
காதல் பிறந்திட-கண்ணம்மா நாம் கடவுளானோமடி

மெய்யால் நெய் விளக்கேற்றி, நெய்யும், திரியுமாய்
நாம் மாறி, காதல் சுடரேற்றி, நம்மை நாம் எரிக்கையில்,
காமம் மறைந்ததடி, காதலே வாழ்வானதடி கண்ணம்மா.
என்றும் என்னுயிர் நின்னதடி

***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
***இன்பமே சூழ்க, எல்லோரும் நலம் வாழ்க***
*Pax Ravichandra- 8-7-2023*

# மாலை சூடிய மங்கை

---

நெற்றிப்பொட்டும், நீல நயனங்களும் காதல் சொல்ல
பூங்குழலில் மல்லிகை காதல் வாசம் வீச-வளையல்
குலுங்கி, கொலசோடு காதல் கட்டியம் சொல்ல
பூமேனி சூடிய வண்ணப் பட்டும் சுகந்தம் சொல்லியதே

கண் தழுவி நான் ருசிக்க-மண் பார்த்து மங்கை சிவக்க,
மதன காவியம் நாம் சேர்ந்தே படிக்க
என்னைத் தழுவ மாலை சூடிய மங்கை
நான் சூட மணமாலையான அழகு நங்கை

மெய் சிலிர்க்க, விழி அரும்பி பூவாய்ச் சிரிக்க
இதழ் அரும்பி புன்னகை பூக்க, நாணம் அரும்பி நங்கை சிவக்க
காதல் அரும்பி-என் மனம் கனிந்த மாயம்தான் என்னே?

வானாகி நின்றேன்-முழுமதியாய் ஒளிர்ந்தாள்
வளியாகி நின்றேன் சீதளமாய்க் கலந்தாள்
மண்ணாகி நின்றேன் மழையாகிக் கலந்தாள்
கடலாகி நின்றேன் அலையாகி ஆடி மகிழ்ந்தாள்

மலராகி நின்றேன் வண்ணமும் வாசமும் தந்தே-காதல்
நெஞ்சில் சூடி மகிழ்ந்தாள்-காதலாகி நின்றேன்-தாரமாய்த்
தன்னைத் தந்த தேவதையோ காதலின் அவதாரம்

கம்பனும் பாடாத தேன் கவிதையிவள்
காமத்துப்பால் சொல்லாத காதல் சுவை இவள்
வெண்பாவுக்குள் அடங்காத அழகுப் பூவை
அன்பால் என்னைச் சூடிய கோதை

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-8-8-2023*

# துளித்துளி மழைத்துளி

---

***பாறையில் அலைகளை-அடித்து துவைத்து***
***வெளுக்கிறது நீலக்கடல்***-ஆற்றில் முகம் பார்த்து
ஒப்பனை செய்கிறது-அழகுநிலா

மழையாய் உதிர்வதற்கு, வானில்
அலையும் வெண்மேகங்கள் இன்னும் கனியவில்லை

கடலின் படையெடுப்பு-இன்னமும் ஓயவில்லை
கரையை பிடிக்க-நாளும் அலைகளை அனுப்புகின்றது.

வலைபின்னும் சிலந்தி, தன் வலையில் சிக்குவதில்லை-
ஆசை வலையில் சிக்கிக் கொண்ட-ஆணவ
மனிதனுக்கோ தப்பிக்க வழி தெரியவில்லை

பசிக்காய், விலங்குகள் வேட்டையாடிட
மதம், மொழி, நிறம், ஜாதிக்காய்-மனிதன்
மனிதனை வேட்டையாடிட-
இன்றும் கூர்ப்படையாத விலங்காய் மனிதன்

ஆதிவாசிகளை கொன்றொழித்து நாடு பிடித்த
வெள்ளை கிறிஸ்தவர் கைகளில் வெற்றுப் புத்தகமாய்
இன்றும் விவிலியம், அறையுண்ட கிறிஸ்துவாய்
இன்றும் சிலுவையில் ஆதிவாசிகள்

சுற்றிச் சுற்றி வந்தும்
பூமிகா மீது கொண்ட-சந்திரனின்
காதல்- ஓயவில்லை

***காவி கட்டிய சாமி-உண்மையில் ஒரு தேவி பக்தர்***

உழுத மாடு உண்ணப் புல்லையும்
உழுவன் பசியாற நெல்லையும் ஈயும் பூமித்தாய்
உண்மையில் பெருவள்ளல்தான்

இதழ்விரித்த பூக்களுக்கு, இயற்கை
தூவிய பன்னீர்-பனித்துளிகள்-

கல்லைத் தெய்வமாக்கி, அப்பத்தை கிறிஸ்துவாக்கி
அதிசயம் புரியும் சாமிகளால், தம்மையோ, பக்தனையோ
மனிதனாக்க இன்றும் முடியவில்லை

கூவி இரந்தால் ஏழை, பிரார்த்த்தனை செய்தால் பக்தன்
காணிக்கை வசூலித்தால் குருக்கள்.

அடிபட்ட யூதனை கண்டும்-ஆஸ்தீகக் குருவும்,
லேவியனும் விலகி நடந்தார்
நாஸ்தீக சமாரியன் உதவி புரிந்தான்
மதத்தன்மை இதுதானோ?

சுன்னிக்கு ஓர் அல்லா, ஷியாவிற்கு ஓர் அல்லா
ஆறு சமையத்தவருக்கு தெய்வங்கள் ஆறு-
கிறிஸ்தவனுக்கோ கிறிஸ்து பல நாறு
பிரிவினையின் வடிவங்களாய் மதங்கள்

அன்று ஆலயங்களில் மனிதர் ஜெபித்தார்
இன்று ஒலிப்பதிவு நாடாக்கள் ஜெபிக்கின்றன.

**கன்னியா- ஸ்திரி?**

ஆலய கோபுரங்களில் வெற்றுச் சிலுவைகள்
இன்றும் அறையத் தேடுகின்றன கிறிஸ்துவை

வீடும் மயானமும், கருவறையும், கல்லறையும்
ஒரு வழிச்சாலையின் இரு முனைகள்

சீதனமின்றி, கல்யாணச் சந்தையில்
விலைபோகாத கண்ணகி-காமச்சந்தையில்
நாளும் மாதவியாய் விலை போகின்றாள்
சிலப்பதிகாரமல்ல இது- வறுமை
எழுதும் காமசூத்திரம்.


பாதையின்றி, வரைபடமின்றி, வேதமின்றி
கடலை அடையும் நதி-எல்லாமிருந்தும்-தேடலின்றி
தன்னுள் கடவுளை காணமுடியாமல்
குருடனாய் அலையும் மானுடம்.

கிறிஸ்தவர் கோடி-கிறிஸ்துவாய் யாருமில்லை
இந்துக்கள் கோடி-கண்ணனாய் யாருமில்லை
இஸ்லாமியர் கோடி-நபியாய் யாருமில்லை
பௌத்தர்கள் கோடி- பெருமான் புத்தராய் யாருமில்லை

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
Pax Ravichandra-8-8-2023

# மலரோ நிலவோ ?

---



கண்ட விழிகளில் காதல் தேனூற-அழகை
உண்டு இரசித்த மனதில் கவிதையும் அரங்கேற
காமனும் போதை கொள்ளும் அழகு
படைத்த பிரம்மனும் பிரமித்த பௌர்ணமி நிலவு

பூவே, பூவை இரசிக்கும் மலர்க்கோலம் மனதை மயக்க
காதல் தேனே நெஞ்சில் பூம்புனலாய்ப் பொங்க
கன்னங்களோ பங்கயம், கருவிழிகளோ குவளையினம்
பொன்மேனியோ வாசச் சந்தனம், பூவையோ பூ இனம்

வாச மலராய் என்னைச் சூடடி பூங்குழலி
வட்ட முகத்தில்- குங்குமமாய் மாறவா-திலகவதி
கண்ணயரக் கனவிலும் வாட்டும் காதல் நிலவு
காதல் தேனமுதை பருகத் தந்த தேன் நிலவு

பொன்னால் படைத்தானோ, பிரம்மன்,கன்னியை
பூவால் படைத்தானோ ஐம்பூ விளையும் அமிர்த நிலம்,
மதி முகம், மையளாவிய விழி, செங்கனி வாய்
பார்க்க மயங்கும் பசுந்தேறல், பார்த்த மனதில் காதலின் சாரல்

கண்களுக்குப் பூவனம், கற்பனைக்கு கவிதையினம்,
மன்மதன் ஐங்கணைக்கு மங்கையோ இலக்கணம்,
மலர்க்கணை பட்ட மனதில் காதலின் நர்த்தனம்
இணையைக் கண்ட கானக்குயிலாய் நெஞ்சில் கீர்த்தனம்

காளிதாஸனின் சாகுந்தலையா? கம்பனின் மைதிலியா ?
பங்கய பாதங்களில் சிலம்பொலிக்கும் கண்ணகியா?
பார்த்து இரசிக்கும் என் நெஞ்சில்
காதல் நர்த்தனம் ஆடும் பல்லவன் சிவகாமி ?

சூடிக்கொடுத்த ஆண்டாளுக்கு என் காதல் நெஞ்சை
சூடக்கொடுத்தேன், பாடிக்களித்த மீராவாய்
பாவை என்னைக் காண- பரந்தாமனை
காதலுக்கு துணையாய் அழைத்தேன்.

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-8-8-2023*

# மலரும் வான் நிலவும்

---

எழில் கண்டு இதயம் துடிக்க, இமைக்க மறந்து
இருவிழிகளும் தவிக்க, குமுத வாயில் அமுது சுவைக்க
முத்த விடாயுற்று தவித்த மனம், முத்துப் புன்னகை
சிந்தி, பொன்மேனி சிவக்க நாணிப் பூத்த பூவையினம்

நாணமோ பூ மேனியில் கோலம் போட-பூவனமோ
பொன்மேனியில் நறுமணம் வீச, வெண்சங்குக் கழுத்தில்
மணமாலை சூடித். திங்கள் முகத்தில் மங்களக் குங்குமம் வைத்து
செவ்வாயில் தேனெடுக்க-கவிதை தூது விட்ட காதலன் நான்

நிலவும் மலரும் கதைபேசும் இரவில், அலையும் கரையும்
உறவாடும் பொழுதில், பொன்னுடல் தழுவி, மலரும்
வண்டுமாய்க் களிக்க, பூத்த காதலின் அழகு நிலைகள்
இதயம் எழுதிய அன்பின் கோலக்கலைகள்

உன் விழிகளின் மொழிகள்தான் காதலா?
உன் செவ்வாய் இதழ்களின் சுவைகள்தான் போதையா?
காதலின் ஓயாத ஆய்வுகள்

பூங்குழலில் மலர்கள் வாழ, பிறைநுதலில் குங்குமம் சிரிக்க
என் அழகே உன் இதயத்தில் நான், என் இதயத்தில் நீ
என வாழ்ந்த வாழ்வும் கனவாயிட, காதல் நதியும்
வற்றிப்போனதடி-ஈரம் காயாமல் கண்களும் காயமானதடி

***காதல் நெஞ்சில் பாய்ந்த கணையானது-என்னை***
***மெல்ல கொல்லும் ஆலகால விஷமானது.***
என் விழிகளில் இன்றும் காயத ஈரம்
என் மொழிகளில் கவிதையின் ஓயாத முகாரி ராகம்

காதல் அஞ்சுகமாய் என்னைக் கொஞ்சிய பஞ்சவர்ணக்கிளி
என் காதல் வானில் கானம் பாடிய வானம்பாடி-சொல்லாமல்
என்னை மறந்து பறந்து போனது, , கொல்லாமல்
என்னை மெல்லக் கொல்ல, காதல் நினைவானது.

உள்ளமும் அமைதியிழந்து கடலாய்க் குமுற-சோகவெள்ளம்
இதயத்தை மூழ்கடிக்க, என் காதல் வானில்-கலைந்துபோன
காதல் வானவில்லின் வண்ணங்கள்-என் இதயக்கோயிலில்-
குலைந்து போன காதலின் வண்ணக் கோலங்கள்.

காதலைப் புரிந்திட, காதலை, காதலித்து அறிந்தேன்
காதலும் வலிக்கும் -காலமெல்லாம் ஆறாத காயமாய்
நெஞ்சில் நிலைக்கும் கற்றுத் தந்த பாடமாக-எங்கிருந்தாலும்
வாழ்க. கன்னியை வாழ்த்தி, கலைந்த கனவில் சாகின்றேன்

# மலரும் மங்கையும்

தேவரும், முனிவரும் மயங்கிடும் பேரழகைக் கண்டு
இமைக்க மறந்த கண்கள், காமன் கணைபட்டு
காதலாகித் துடித்து தவித்த இதயம்-காமத்துப்பால்
அருந்த வள்ளுவனைத் துணைக்கழைத்த மனம்.

அழகு மங்கையர் கண்டு, அலைமோதும் கண்களும் நிலைக்க
அசையும் மனமும் மறைந்து தியானத்தில் நிலைக்க-
பூரித்த அழகை, மூடியும் மூடாமலும் காட்டும் பூவையர்
பூ வனமோ இல்லை மோகினி இனமோ?

பொங்கிடும் இன்பக் கிளர்ச்சியில், புண்பட்டு மனம் தவிக்க
காதற் காமத்தின் உச்சத்தில் மனம் கவிதை படிக்க
கங்கோத்திரம் இமயத்தில் உண்டு, காமகோத்திரம்
அழகு மங்கையரில்தான் உண்டு வியந்த மனம்

முனியும், தவசியும் தடுமாறிய முலைத் தடங்கல்
மனதை அள்ள, தடைக்கல் அல்ல உன் தவத்தின்
படிக்கல் இவை, காமம் கடந்தால் கடவுள் நிலை

விழிகள் கலந்து, ஆனந்தப் பரவசத்தில் திளைக்க
காமன் ரதியாய் கனவு பிறக்க, கண்பார்த்து மெய் சிலிர்க்க
காமன் கங்கை உடைப்பெடுக்க, பெண்பாலிவளை அன்பால் தழுவு
காமத்துப்பாலிவளை காதலாகிப் பருகி, நின் என்பால்
இறைவன் படைத்த பெண்பால் இவள், தாயும், தாரமுமமான
தெய்வீகப் பால் மனதின் வேண்டுதலானது.

விழிப்புணர்வில் காமம் கடந்து , விழித்து மங்கை இதயத்தை பார்த்தேன்
கங்கை அவள்-சிவன் நான், சடையில் சூடி சர்வேஸ்வரனாய் மாறிட
நீ பாதி நான் பாதி என உமையொருபாகனாய் உருமாறிட
காதலில் என்னை இழந்தேன்

முலையழகில் சந்தனம் பூசி, சடையழகில் மலர் வைத்து
மின்னல் கொடியிடையழகிகளை சிகிரியாவில்
வண்ண ஓவியமாய் படைத்த, மன்னன் காசியப்பன் இரசிகனே

சித்தன்ன வாசல் ஓவியங்கள், சிற்றிடை மின்னி மறைய
கன்னியர் ஆடும் நடனங்கள், சித்திரப்புலி
மகேந்திரவர்ம பல்லவனின் கை வண்ணத்தில் பிறந்த சித்திரங்கள
கற்பனையில் கம்பன் கவிதையை மிஞ்சிடும் நிஜங்கள்

சிகிரியாவின் ஓவியங்கள், அஜந்தாவின் அழகுச் சித்திரங்கள்
எல்லோராச் சிற்பங்கள்-எல்லாம் நிதர்சனங்களே
காலத்தை வென்று வாழும் அற்புதக் கலைப்படைப்புகளே

இதழ் விரித்த பூ அழகு, வண்ணப் பூக்களாய் பூத்த பூவையரும்,
பூக்களினும் பேரழகு, காமம் கடந்த காதலும் அழகு
தூய மனமோ இறையழகு, துய்ப்பவன் கலைஞனானாள்
கண்டு ரசிப்பதும் கலையே, வாழ்வும் கவிதை அழகே

ஏவாளைக் காதல் கொண்டு, ஏதேனில் வாழ
இறை தந்த வாழ்வோ இன்ப வனம்
காதல் அன்புத் தவம்-இல்லறமோ
இறை தரும் அரிய வரம்

***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
***எல்லாப் புகழும் இறைவனுக்கே***
*Pax Ravichandra-8-8-2023*